தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு




வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் ஓடிசா கடற்கரைக்கு அருகில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிப்பதால், வெள்ளிக் கிழமையும் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பரங்கிப்பேட்டை, மரக்காணம், திண்டிவனம், காட்டுமன்னார்கோயில், கூடலூர், கொள்ளிடம், மாதவரம் ஆகிய இடங்களில் மழை பெய்தது.

### நெல் பயிரைத் தாக்கும் சிலந்தியை ஒழிப்பது எப்படி?



நெல் பயிரைத் தாக்கும் சிலந்தி இனங்களை அழிப்பது தொடர்பான முறைகளைக் கையாண்டு, தங்களுக்கு நஷ்டம் ஏற்படாமல் விவசாயிகள் பார்த்துக் கொள்வது அவசியம். பொதுவாக, நெல் பயிரை ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் "ஒலிகொநிகஸ்ஒரைசி' எனப்படும் ஒரு வகையான சிலந்தி இனங்கள் தாக்கும். இதன் தாக்குதல் காரணமாக, நெல் பயிர் அதிக சேதமடைந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். இந்த வகையான சிலந்தி தாக்குதலில் இருந்து விவசாயிகள் தங்களது பயிர்களை தற்காத்துக் கொள்வது மிகவும் அவசியம். நெல் பயிரைச் சேதப்படுத்தும் சிலந்திகள் ஒழிப்பு முறை குறித்து திரூர் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் ஏ.சுமதி கூறியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது ஒதிக்காடு, கிளாம்பாக்கம், பொன்னேரி, திரூர், பூரிவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பயிர்களில் தற்போது 'ஒலிகொநிகஸ் ஒரைசி' என்ற சிலந்தியின் தாக்குதல் அதிக அளவில் உள்ளது. வெப்ப நிலை, ஈரப்பதம் அதிக அளவில் நிலவும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இந்த சிலந்தியின் தாக்குதல்கள் நெற்பயிரில் அதிகமாக காணப்படும். இந்த சிலந்தி தாக்குதலின் அறிகுறியாக, பயிர்களின் அடி இலைகளில் மஞ்சள் கலந்த வெள்ளை நிற துகள்கள் போன்ற புள்ளிகள் தோன்றும். இலை நரம்புகளுக்கிடையில் உள்ள பகுதி வெளுத்துக் காணப்படும். பின்னர், அனைத்து இலைகளிலும் இப்புள்ளிகள் பரவி வெண்ணிறமாக மாறிவிடும். இதனால் பயிரில் ஒளிச்சேர்க்கை செய்வது தடைபட்டு மகசூல் இழப்பு ஏற்படும். **கட்டுப்படுத்தும் முறை:** இந்த பூச்சித்

தாக்குதலில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க, வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டியது அவசியம். பின்னர், புரபார்கைட் 1.5 மில்லிலிட்டர் அல்லது பெனசாகுயின் 1.5 மில்லிலிட்டர் என்ற அளவில் இரண்டு முறை 15 நாள்கள் இடைவெளியில் தெளித்து இந்த சிலந்தியைக் கட்டுப்படுத்தலாம் என்றார். இதுகுறித்து மேலும் விவரங்ரகளை அறிய, திரூர் வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியரும், தலைவருமான ஆர்.அகிலாவை அணுகலாம்.

**<u>கோமாரி நோயைக் கட்டுப்படுத்தும் மூலிகை மசால் உருண்டைகள்</u>**



ஈரோடு: கோமாரி நோய் உள்பட பல்வேறு நோய்களில் இருந்து கால்நடைகளைப் பாதுகாக்க மூலிகை மசால் உருண்டைகளை வழங்கலாம் என்று கால்நடைகள் ஆராய்ச்சியாளரும், ஜெயம் பிராணிகள் நல அறக்கட்டளைத் தலைவருமான கே.வி.கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து, அவர் புதன்கிழமை கூறியதாவது:**
இயற்கை விவசாயத்துக்குத் தேவையான அனைத்தையும் வழங்கி, மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் வித்திடுவதும் கால்நடைகள் தான். மனித வாழ்க்கையில், மனிதன் வளர்ச்சியில், மனிதன் ஆரோக்கியத் தில் கால்நடைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆகவே, கால்நடைகளின் நலனில், ஆரோக்கியத்தில் நாமும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. கால்நடைகளின் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிப்பது மூலிகை மசால் உருண்டை. ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறை மூலிகை மசால் உருண்டை

தயார் செய்து கொடுத்தால் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உருவாகி, கோமாரி, தொண்டை அடைப்பான், சப்பை நோய் மற்றும் பிற தொற்று நோய்களும் தாக்காது. **தயார் செய்வதுஎப்படி?:** மூலிகை மசால் உருண்டைகளைத் தயார் செய்ய கீழ்க்கண்ட எளிதில் கிடைக்கும் மூலிகைகள் ஒவ்வொன்றிலும் 100 கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். முதலில் கடைச் சரக்குகளை மிக்ஸியில் நன்கு அரைத்துக் கொண்டு தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து மூலிகைகளை ஆட்டுக்கல் அல்லது பழைய உரலில் இட்டு நன்கு இடித்துக் கொள்ள வேண்டும். அல்லது கிரைண்டரிலும் அரைத்துக் கொள்ளலாம். அரைத்து வைத்துள்ள கடைச் சரக்கு மற்றும் மூலிகைகளை பெரிய தட்டில் வைத்து ஒன்றாக நன்கு பிசைந்து ஆரஞ்சு பழ அளவுக்கு உருண்டைகளாக உருட்டி எடுத்து மஞ்சள் தூளில் பிரட்டி வைத்துக் கொள்ளவேண்டும். மேற்கண்ட கலவையை 40 மாடுகளுக்கோ, 100 ஆடுகளுக்கோ கொடுக்கலாம். மூலிகைகளை அந்தந்த ஊர்களில் கிடைப்பதைக் கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம். கிடைக்காத மூலிகைகள் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மூலிகைகள் கிடைக்கும் போது எடுத்து, நிழலில் உலர்த்தி நன்கு காய்ந்ததும் மிக்ஸியில் அரைத்தும் மசால் உருண்டைகளாகத் தயார் செய்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மசால் உருண்டைகளை கால்நடைகளுக்கு வயிற்றுப் போக்கு உள்ள போதும், தொற்று நோய்த் தாக்குதல் இருக்கும் போதும், மந்தம், செரியாமை இருந்தாலும் வழங்கலாம்.

**மூலிகை மசால் உருண்டை தயாரிக்க தேவையானவை:**

1.அருகம்புல் 2. ஆவராம் பூ, இலை 3. வெள்ளை மற்றும் மஞ்சள் கருசலாங்கன்னி 4. சோற்றுக் கற்றாழை 5. ஆடா தோடா 6. வாத நாராயணன் இலை 7. ஓரிதழ் தாமரை 8. செம்பருத்தி 9. தும்பை 10. அழுதாழை 11. பெரியா நங்கை 12. சிறியா நங்கை 13. அமுக்கரா 14. அம்மாள் பச்சரிசி 15. வாழைப்பூ, 16. வெற்றிலை 17. பிரண்டை, 18. துத்தி 19. மாவிலை 20. வல்லாரை 21. துளசி 22. முடக்கத்தான் 23. மனத்தக்காளி 24. புதினா 25. நெருஞ்சி 26. நெல்லிக்காய் 27. நுணா 28. பொன்னாங்கன்னி 29. நல்வேளை 30. நாய்வேளை 31. பால்பெருக்கி 32.

குப்பைமேனி 33. கோவை இலை 34. மொசு மொசுக்கை 35. கருவேப்பிலை 36. கீழாநெல்லி 37. அகத்தி 38. சரக்கொன்றை 39. நிலவேம்பு 40. வேலிப்பருத்தி 41. வெட்டிவேர் 42. மருதாணி 43. வில்வஇலை 44. விஷ்ணுகிரந்தி 45. மாதுளம் பழம், தோல் 46. தவசி முருங்கை 47. அப்பக்கோவை 48. அல்லி, 49. தாமரை 50. அரசு இலை 51. வேப்பிலை 52. தூதுவளை 53. தொட்டாச் சிணுங்கி 54. எலுமிச்சை இலை 55. கொய்யா இலை 56. ஆல் இலை

**சமையல்அறைச்சாமான்கள்:**

1. சுக்கு 2. மிளகு 3. திப்பிலி 4. பூண்டு 5. அகில் 6. மிளகாய் வற்றல் 7. கிராம்பு 8.ஜாதிக்காய் 9. கடுக்காய் 10. வெந்தயம் 11. அதிமதுரம் 12. சீரகம் 13. கசகசா 14. ஓமம் 15. உப்பு 16. தண்ணீர் விட்டான் கிழங்கு 17. சிறிய வெங்காயம் 18. கொத்தமல்லி விதை 19. பெருங்காயம் 20. தேங்காய் 21. பனைவெல்லம் 22. ஏலக்காய் 23. மஞ்சள்தூள். தயார் செய்யப்பட்ட மூலிகை உருண்டைகளை மேற்கூறியுள்ளபடி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கால்நடைகளுக்கு கொடுத்து வந்தால் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும். கால்நடைகள் சுறுசுறுப்புடனும், ஆரோக்கியத்துடனும் வாழும். மேலும், கூடுதல் தகவல் அறிய 9842704504 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

**<u>விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்</u>**

தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநில குழுக் கூட்டம் மற்றும் 2 நாள் சிறப்பு மாநாடு திருவண்ணாமலையில் வியாழக்கிழமை தொடங்கியது.

மாநாட்டுக்கு, சங்கத்தின் மாநிலத் தலைவரும், எம்எல்ஏவுமான ஏ.லாசர் தலைமை வகித்தார். முன்னாள் எம்.பி.யும், சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளருமான ஏ.விஜயராகவன், அகில இந்தியத் தலைவர் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர். மாநிலத் தலைவர் லாசர் பேசுகையில், தமிழகத்தில் தகுதி ஆய்வு என்ற பெயரில் உதவித் தொகை நிறுத்தப்பட்ட

அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவித் தொகை நிறுத்தப்பட்டதால் மாநிலம் முழுவதும் 2,65,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். வறட்சி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாய வேலை சுருங்கியுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு நாடு முழுவதும் உள்ள 6,603 ஒன்றியங்களிலும் வேலை வழங்க வேண்டும். வறட்சியால் காய்ந்து போன தென்னை உள்ளிட்ட அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஜி.மணி, மாநில பொருளாளர்எம்.அமிர்தலிங்கம், மாநிலதுணைத் தலைவர்கள் எஸ்.மொக்கராஜ், வசந்தாமணி, மாநிலச் செயலாளர்கள் எஸ்.சங்கர், ஏ.பழனிச்சாமி, மாவட்டத் தலைவர் கே.கே.வெங்கடேசன், மாவட்டச் செயலாளர் எம்.பிரகலநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக இதுகுறித்து முன்னாள் எம்.பி.யும், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஏ.விஜயராகவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை ஒதுக்கீடும், சமூக நலத் திட்டங்களும் குறைந்துவிட்டது. எனவே, விவசாயத் தொழிலாளர்களின் நலன் கருதி, மத்திய அரசு மாற்று வேலைவாய்ப்புத் திட்டத்தை கொண்டுவர வேண்டும். இப் பிரச்னைகளை சீரமைத்தால் தான் மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க மத்திய-மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியா முழுவதும் வரும் நவம்பர் மாதத்தில் தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து பிரசாரம், போராட்டங்கள் நடத்தப்படும் என்றார்.

## கோமாரி நோய் தடுப்பு முகாம் நீட்டிப்பு

தருமபுரி மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் மேலும் ஒரு வார காலத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் 3,59,100 மாடுகள் உள்ளன. இந்த கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுக்க முன்னெச்சரிக்கையாக முகாம்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் கடந்த 1-ஆம் தேதி 21-ஆம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் இது வரை 2,68,250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இந்த முகாம் வருகிற 22-ஆம் தேதி முதல் மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்களது கால்நடைகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு பயனடைய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>மரவள்ளியில் மாவுப் பூச்சியை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்த அறிவுறுத்தல்</u>

ராசிபுரம் பகுதியில் மரவள்ளியைத் தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்தலாம் என ராசிபுரம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் வி.மோகன் விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளி பயிர் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. ராசிபுரம் வட்டாரத்தில் சுமார் 750 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மரவள்ளியில் பப்பாளி மாவுப் பூச்சிகள் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தப் பூச்சிகள் தாக்குதலுக்குள்ளான இலைகள் உருமாறி சிறுத்துக் காணப்படும். இந்தப் பூச்சிகள் பயிரின் தண்டு, இலைகளின் அடிப்பாகம், இலைக் காம்பின் இடுக்குகளில் வெள்ளை நிற உறையால் சூழ்ந்து காணப்படும். இந்தப் பூச்சிகள் வெளியேற்றும் தேனை அருந்த எறும்புகள் ஊர்ந்து செல்வதைக் காணமுடியும். இலையின் மேல்பரப்பில் கரும்பூஞ்சாணம் படர்ந்து காணப்படும். கட்டுப்படுத்தும் முறைகள்:

மாவுப் பூச்சிகள் களைச் செடிகளில் அடைக்கலமாவதால் வயல்களைக் களையின்றி வைத்துக் கொள்ள வேண்டும். பாதிப்பு மிகக் குறைவாக இருந்தால் பாதிக்கப்பட்ட இலை, தண்டுகளைப் பாலித்தீன் பைகளில் சேகரித்து எரிக்க வேண்டும். அடிவெட்டு செய்தவுடன் 0.2 சதம் புரடோமோனாபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. வீதம் ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்து கரைசல் தயார் செய்து செடியின் அடித் தண்டு, செடியைச் சுற்றி மண் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

மருந்துடன் ஒட்டும் திரவத்தைக் கலக்க வேண்டும். முதல் தெளிப்பி லிருந்து பத்து நாள் கழித்து ரோகர் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 மி.லி. என்ற விகிதத்தில் வேப்பெண்ணையுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். விவசாயிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாக நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே பப்பாளி மாவுப்பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும். மாவுப்பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த, ஏத்தாப்பூர் மரவள்ளி, ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து ஒட்டுண்ணிகளைப் பெற்று வயலில் விடலாம். ஒட்டுண்ணிகளை விட்ட பிறகு ரசாயன பூச்சிக் கொல்லிகளைத் தெளிக்கக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை 340 காசாக உயர்வு



நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 10 காசுகள் உயர்த்தப்பட்டு, 340 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணை யாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலை, 330 காசுகளில் இருந்து, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 365, பெங்களூரு, 360, மைசூர், 355, ஐதராபாத், 335, மும்பை, 375, விஜயவாடா, 336, கோல்கட்டா, 370, பர்வாலா, 336, டில்லி, 345.இவ்வாறு, விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கறிக்கோழிவிலை, 76 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் இலவச மிளகாய் சாகுபடி பயிற்சி

நாமக்கல்: "கத்திரி, தக்காளி மற்றும் மிளகாய் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 23ம் தேதி நடக்கிறது' என, அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட

அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், கத்திரி, தக்காளி, மிளகாய் ஆகியவற்றில் உள்ள வீரிய ஒட்டு ரகங்கள், குழித்தட்டு முறையில் நாற்று உற்பத்தி, இரட்டை வரிசை நடவு முறை, சொட்டு நீர்பாசனம் அமைத்தல், நீர்வழி உரமிடல், களை நிர்வாகம், மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கும் தொழில்நுட்பம், ஊட்டச்சத்து குறைபாடு நிவர்த்தி செய்யும் முறை, பூச்சி நோய் நிர்வாக முறை உள்ளிட்ட ஒரு நாள் இலவச பயிற்சி முகாம், வரும், 23ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. எனவே, விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 22ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு, 04286 - 266 345 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்

தர்மபுரி: தர்மபுரி யூனியன், புழுதிக்கரை ஊராட்சி காட்டம்பட்டி கிராமத்தில், கிருஷ்ணாபுரம் கால்நடை மருந்தகத்தின் மூலம் அரசின், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. முகாமில், 300 கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசியும், 600 ஆடுகளுக்கு, குடற்புழு நீக்கமும் மற்றும் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, சினைப்பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் போன்ற பணிகள் நடந்தது. முகாமில், கால்நடை உதவி டாக்டர்கள் சரவணன், ஜெயந்தி, கால்நடை ஆய்வாளர் முருகன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் அன்புக்கரசி, கிருஷ்ணன் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

## முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் கல்வி உதவி வழங்க ஆலோசனை கூட்டம்

பெரம்பலூர்: பெரம்பலூர் டி.ஆர்.ஓ., அலுவலகத்தில், அனைத்து அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன், முதல்வரின் உழ வர் பாதுகாப்பு திட்டத்தில் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு, டி.ஆர்.ஓ., ராஜன்துரை

தலைமை வகித்து பேசியதாவது: தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில், உறுப்பினராக பதிவு செய்துள்ளவர்களின் குழந்தைகளுக்கு, வருவாய்த் துறை மூலமாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தொழிற்பயிற்சி முதல் அனைத்து பட்டப் படிப்பு, ஆசிரியர் பயிற்சி, சட்டம், பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழிற்கல்வி படிப்புகளுக்கும், முதுநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் தனித்தனியாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளவர்களின் குழந்தைகளுக்கு, தமிழக அரசின் பல்வேறு துறையின் மூலம் கல்வி உதவித்தொகை பெற்றிருந்தாலும், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெற தடையில்லை. எனவே, உழவர் பாதுகாப்பு திட்டத்தில், அடையாள பெற்றுள்ள அனைவரும் இத்திட்டத்தில், கல்வி உதவித்தொகை பெற, சம்மந்தப்பட்ட தாசில்தார் அலுவலகத்தில் அல்லது பயிலும் கல்லூரி முதல்வர் மூலமாக விண்ணப்பித்து பயன்பெறலாம். இவ்வாறு அவர் பேசினார்.

தினகரன்

**இன்றையவேளாண்செய்திகள்**

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 95 அடி



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 5291 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 3571 கனஅடியாக குறைந்தது. நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால் டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு 23,900 கன அடியாக நேற்று முன்தினம் இருந்தது. அது நேற்று காலை முதல் 21,900 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. நீர்வரத்தை விட திறப்பு அதிகமாக உள்ளதால் நீர் மட்டம் தொடர் ந்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 96.98 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி குறைந்து நேற்று காலை 95.38 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 59.01 டிஎம்சி.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை எகிறியது கிலோ ரூ.70க்கு விற்பனை



குன்னூர் : குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் கிலோவுக்கு ரூ.4 அதிகரித்து விற்பனையானது.நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 38வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 8 லட்சத்து 87 ஆயிரத்து 230 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 3 லட்சத்து 21 ஆயிரத்து 825 கிலோவும், டஸ்ட்ரகம் 5லட்சத்து 66ஆயிரத்து 40கிலோ வும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் கலந்து கொண்டனர். இதனால், 80 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.4 வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.56, உயர் வகை ரூ.60 முதல் ரூ.69, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.52 முதல் ரூ.54, உயர் வகை ரூ.62 முதல் ரூ.70 வரை விலை கிடைத்தது.கடந்த சில வாரங்களாக இந்த ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் சரிந்து வந்தது. இந்நிலையில், இந்த வாரம் தேயிலை விலையும் விற்பனையும் உயர்ந்துள்ளது என்று ஏல மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**உளுந்தூர்பேட்டை பகுதியில் மணிலா அறுவடை பணி தீவிரம்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் வட்டாரத்திற்கு உட்பட்ட உளுந்தாண்டார்கோயில், செம்மணங்கூர், நகர், வண்டிப்பாளையம், சின்னக்குப்பம், நைனாக்குப்பம், எலவனாசூர்கோட்டை, எறையூர், கூவாடு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இறவை பயிராக மணிலாவை கடந்த 3 மாதங்களுக்கு முன்

விவசாயிகள் பயிரிட்டனர். கடந்த ஒரு வாரகாலமாக இந்த மணிலா பயிரை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அறுவடை செய்யப்படும் மணிலாவை சேலம், திருச்சி, சென்னை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் கிலோ ரூ 18 முதல் ரூ 20க்கு வாங்கி செல்கின்றனர். தற்போது அறுவடை செய்யப்படும் மணிலா பயிர் போதிய மழை இல்லாததால் குறைவான அளவே மகசூல் கிடைத்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**<u>குண்டல்பட்டியில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி</u>**

தர்மபுரி,: தர்மபுரி மாவட்டம் குண்டல்பட்டியில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவி யல் பல்கலை பயிற்சி மற் றும் ஆராய்ச்சி மையத்தில் நேற்று லாபகரமான கறவை மாடு வளர்ப்பிற்கேற்ற அறிவியல் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு கால்நடை பல்கலை கழகம் மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். பயிற்சியில் வணிக ரீதியான கறவை மாடு பண்ணை அமைக்க, கறவை மாடு தேர்வு செய் யும் முறைகள், கொட்டகை அமைத்தல், பசுந்தீவன உற் பத்தி, அடர் தீவனம் அளித் தல், கன்று பராமரிப்பு, பண் ணை பராமரிப்பு, இனபெரு க்க முறைகள், பண்ணை பொருளாதாரம் மற்றும் காப் பீடு வசதிகள் குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**<u>மா சாகுபடிக்கு ரூ.25 ஆயிரம் மானியம்</u>**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி தாலுகாவில் மா சாகுபடி மேற்கொள் ளும் விவசாயிகளுக்கு ரூ.25 ஆயிரம் மானியம் மற்றும் தேவையான இடுபொருட்கள் வழங்கப்படும் என்று தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராம பகுதிகளில் பருவமழையின்போது விவசாயிகள் பலர் மானாவாரி பயிர் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். இதில், மானாவாரி விளை நிலத்தில் மா சாகுபடி மேற்கொள்ளும் சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில், சுற்றுவட்டார கிராமங்களில் அண்மையில் பெய்த பருவமழையை தொடர்ந்து, பல இடங்களில் விவசாயிகள் காய்கறி சாகுபடி

மேற்கொள்கின்றனர். இதில் மா சாகுபடியை அதிகரிப்பதற்காக மானாவாரி நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மா சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் மானியம் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. அதுமட்டுமின்றி மா ரகத்தில் நீலம், செந்தூரம், பங்கனபள்ளி, இமாம்சந்த், பெங்ளூரா ஆகிய ரக கன்றுகளும் வழங்கப்பட உள்ளது. மா சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள், தங்களுக்கான மானியம் பெற சிட்டா அடங்கல், ரேஷன்கார்டு ஆகியவற்றின் நகல், விஏஓ சான்று மற்றும் 3 போட்டோ ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்க வேண்டும். இதில் தகுதியுள்ள விவசாயிகளுக்கு மானியம் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும் என்றனர்.

**<u>கழுகுமலை பகுதியில் மழையை நம்பி மக்காச்சோளம் விதைப்பு பணிகள் தீவிரம்</u>**

கழுகுமலை: கழுகுமலை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இந்த ஆண்டு பருவமழையை நம்பி விவசாயிகள் மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, பருத்தி உள்ளிட்டவற்றை விதைக்கும் பணி நடந்து வருகிறது. கழுகுமலை மற்றும் சுற்றியுள்ள 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவ சாய நிலங்கள் பெரும்பாலும் வானம் பார்த்த பூமியாகும். கண்மாய், குளங்களில் பெருகும் நீரை கொண்டு விவசாயம் செய்ய வேண்டியுள்ளது. இப்பகுதிகளில் கடந்த 3 வருடமாக பருவமழை சரிவர பெய்யாததால் விவசாய தொழில் நஷ்டத்தை சந்தித்தது. பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விளைநிலங்களை காற்றாலை நிறுவனத்திற்கு விற்று விட்டு வேறு மாநிலத்திற்கு வேலை தேடி செல்லும் அவல நிலை உருவாகியது. மேலும், கிணறுகள் உள்ள விவசாய நிலங்களில் தண்ணீர் கடும் உப்பாக இருப்பதால் அதில் பயிர்கள் விளைவிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. கடந்த ஆண்டு கழுகு மலை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களான ராமநாதபுரம், லட்சுமிபுரம், வெங்கடேஸ்வரபுரம், காலங்கரை பட்டி, சங்கரலிங்கபுரம், வானரமுட்டி, காளாம்பட்டி, அழகப்பபுரம், கல்லூரணி, செட்டிக்குறிச்சி உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்காச்சோளம், உளுந்து, பாசிபயறு, பருத்தி உள்ளிட்டவைகளை பயிரிட்டனர். போதிய மழை பெய்யாததால்

பயிர்கள் அனைத்தும் கருகின. இதனால் பல விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டனர். தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து கருகிய பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை நிவாரண உதவி தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.ஆனால் அரசு விவசாயிகளுக்கு கடந்த 2012ம் ஆண்டு ரூ.3 ஆயிரம் மட்டுமே நிவாரணமாக வழங்கியது. அதுவும் சில பகுதிகளுக்கு வழங்கவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர். இந்நிலையில் இந்காண்டு பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் கழுகுமலை மற்றும் சுற்றுப்பகுதி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தங்களது நிலங்களை பண்படுத்தி மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிறு, பருத்தி உள்ளிட்ட பயிர்களை நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து, விவசாயி முருகன் கூறுகை யில், “கடந்த 3 வருடத்திற்கும் மேலாக சரிவர மழை பெய்யதாதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மழையை நம்பி கடன் வாங்கி மக்காச்சோளம், உளுந்து, பாசிபயறு, பருத்தி உள்ளிட்டவைகளை பயிரிட்டோம். மழை பொய்த்ததால் பயிர்கள் அனைத்தும் வாடின. இதனால் அரசிடம் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரண தொகை வழங்கி விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என கோரிக்கை வைத்தோம். எந்தவித பயனும் இல்லை. கடந்த 2012ம் ஆண்டு ரூ.3 ஆயிரம் மட்டும் நிவாரண தொகையாக வழங்கப்பட்டது. 2013ம் ஆண்டு எந்த நிவாரண தொகையும் வழங்கப்படவில்¬லை. பயிர்க்காப்பீடு செய்தும் இதுவரை உதவித்தொகை வழங்கப்படாமல் உள்ளது. இந்த ஆண்டு மழையை நம்பி மக்காச்சோளம், உளுந்து உள்ளிட்டவைகளை விதைக்கும் பணி நடந்து வருகிறது. எனவே அரசு விவசாயிகளின் பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து ஏக்கருக்கு 15 ஆயிரம் நிவாரண தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்றார்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

கரூர்: தாந்தோணி ஒன்றியம் பொரணியில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் கல்யாணி, ஒன்றிய

கவுன்சிலர் சுப்பிரமணி முன்னிலை வகித்தனர். டாக்டர் ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் பசுமாடுகள், எருமைமாடுகள், செம்மறியாடுகள் வெள்ளாடுகள், கோழியினங்கள் என 1175 கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கானசிகிச்சைஅளித்தனர்.

**கறம்பக்குடி அருகே திருந்திய நெல் சாகுபடி பண்ணை பள்ளி பயிற்சி**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டம் கீழ் திருந்திய நெல் சாகுபடி பண்ணை பள்ளி பயிற்சியை நடத்தியது. புதுக்கோட்டை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்ட நிதியுடன் கறம்பக்குடி வட்டாரம் பந்தவாக்கோட்டையில் திருந்திய நெல் சாகுபடி பண்ணை பள்ளி பயிற்சியை கறம்பக்குடி வட்டார வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம் கிரின்கேர் பவுண்டேசன் தொண்டு நிறுவனமும் இணைந்து பயிற்சியை நடத்தின. இப்பயிற்சியில் 60க்கும் மேற்பட்ட பந்தவாக் கோட்டை முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். திருந்திய நெல் சாகுபடி பற்றிய பயிற்சி தொழில்நுட்ப கையேடுகளை பயிற்சியாளர் களுக்கு கறம்பக்குடி இணை இயக்குனர் மனோகரன் வழங்கி திருந்திய நெல் சாகுபடியின் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல் மற்றும் லாபம் ஈட்டுவதற்குரிய சாகுபடி பயிற்சிகள் குறித்து விளக்கினர். பயிற்சியில் கிரின்கேர் பவுண்டேசன் நிறுவனர் ரவீந்திரன், வேளாண் உதவி அலுவலர்கள் சவுந்தராஜன், பிரியகுமார் ஆகியோர் கொண்ட குழுவினர் பயிற்சி அளித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கிரின்கேர் பவுண்டேசன் அலுவலர்கள் ரெங்கசாமி, அர்ச்சுனன்மற்றும்ராஜ்குமார்செய்திருந்தனர்.

**நடவு துவரை சாகுபடியில் அதிக மகசூல் பெறும் முறை வேளாண்மை உதவி இயக்குநர் வழிகாட்டல்**

திருமயம்: நடவு துவரை சாகுபடியில் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து அதிக லாபம் பெறும் முறை குறித்து திருமயம் வேளாண்மை உதவி இயக்குநர் ராமமூர்த்தி விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடைய பயறு சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில் தமிழக அரசு வேளாண்மை துறையின் மூலம்

பயறு இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது. வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் நடவு துவரை சாகுபடி ஒரு முக்கியமான திட்டமாகும். நடவு துவரை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் வருமாறு; நடவு துவரை சாகுபடிக்கு நாற்றங்கால் அமைக்க ஏற்ற பருவம் கோ.ஆர்.ஜி 7 ரகத்திற்கு புரட்டாசி பட்டமும் ஏ.பி.கே 1 மற்றும் வம்பன் 3 ரகத்திற்கு ஐப்பசி பட்டமும் ஏற்றது. 6*4 அளவுள்ள பாலிதீன் பைகளின் இரண்டு பக்கங்களிலும் துளையிட்டு மண் மணல் மற்றும் எருகலந்த கலவையை நிரப்ப வேண்டும். ஒரு ஏக்கருக்கு 6250 பைகள் போதுமானது. ஒரு எக்டேருக்கு தேவையான விதையளவு 2.5 கிலோ. விதை மூலம் பரவும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்த விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடி என்ற அளவில் கலந்து வைக்க வேண்டும். விதைப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் 200கிராம் ரைசோபியம் மற்றும் 200 கிராம் பாஸ்போபாக்டீரியாவை ஆறிய வடிகஞ்சியில் கலக்க வேண்டும். பின்பு ஒரு எக்டருக்கு தேவையான விதையை வடிகஞ்சி கரைசலில் கலந்து நிழலில் உலரவிட வேண்டும். பைக்கு இரண்டு விதைகள் வீதம் 1செ.மீ ஆழத்தில் ஊன்றி மணல் மூடி பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். களைகள் இருப்பின் எடுத்து விட வேண்டும். இலையைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருடன் 2மி.லி குளோர்பைரிபாஸ் மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நடவு வயலை சட்டிக் கலப்பை கொண்டு உழவு செய்து கடைசி உழவின் போது 5டன் தொழுஉரம் இடவேண்டும். எக்டருக்கு 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். ஜிப்சம் இடுவதால் மண்ணின் தன்மை மிருதுவாவதுடன் நல்ல காற்றோட்டம் கிடைக்கும். நடவுக்கு முன்பு எக்டருக்கு 5கிலோ நுண்ணூட்ட கலவையை மணலுடன் கலந்து இடவேண்டும். அடியுராமக எக்டருக்கு 55கிலோ யூரியா 312.5கிலோ சூப்பர் பாஸ்பேட் 20 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். துவரைச்செடியை நடவு செய்யும் பொழுது வரிசைக்கு வரிசை 5அடி இடைவெளியும் செடிக்கு செடி 3அடி இடைவெளி இருக்குமாறு நடவு செய்யவேண்டும். இந்த நடவிற்கு 25-30 நாள் வயதுடைய நாற்றுக் களைப் பயன்படுத்த வேண்டும். நடவு செய்த 20ம் நாளில் ஒரு

லிட்டருக்கு 2மி.லி இமாசிதையபர் களைக்கொல்லி தெளித்து களைகளை கட்டுப்படுத்தலாம். நடவு செய்த 2030 நாட்களில் செடியின் நுனியை மேலிருந்து 2அங்குலம் விட்டு கிள்ளிவிட வேண்டும். இதனால் அதிக பக்க கிளைகள் வெடிக்கும். பூ உதிர்வதை தடுக்க பூக்கும் சமயம் ஒரு லிட்டர் நீரில் 0.5மி.லி பிளானோபிக்ஸ் என்ற பயிர் ஊக்கியை கலந்து கை தெளிப்பான் மூலம் மாலையில் தெளிக்க வேண்டும். இதைத் தவிர 2சதவீத டி.ஏபி கரைசல் அதாவது எக்டருக்கு 10கிலோ டி.ஏ.பி உரத்தை 50லிட்டர் நீரில் 12 மணி நேரம் ஊற வைத்து பின்பு தெளிந்த நீரை மட்டும் வடிகட்டி இக்கரைசலை 500லிட்டர் நீரில் கலந்து பூக்கும் தருணக்கில் 15நாள் இடைவெளியில் 2முறை கெளிக்க வேண்டும். நடவு செய்தவுடன் பூக்கும் முன் மற்றும் காய்பிடிக்கும் தருணங்களில் நீர் பாய்ச்சுதல் அவசியம். நடவு துவரையில் ஊடுபயிராக நிலக்கடலை, உளுந்து, பாசிபயறு எள் மற்றும் சோளம் போன்ற குறைந்த வயது பயிர்களை பயிரிடடு பயன் பெறலாம். காய்ப்புழு தாக்குதல் தென்பட்டால் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருடன் 3.5மி.லி குளொர்பைரிபாஸ் மருந்து கலந்து தெளிக்கவேண்டும். இந்த நடவு முறை துவரை சாகுபடியில் எக்டருக்கு 2.5 மெ.டன் வரை மகசூல் கிடைக்கிறது. மேலும் துவரை சாகுபடி செய்யும் போது விவசாயிகள் குழு அமைத்து அக்குழுக்களை விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்பாக ஒருங்கிணைத்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் கூட்டுறவு துறையின் மூலம் அரசே நியாயமான விலைக்கு துவரையை கொள்முதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே விவசாயிகள் துவரையை நடவு முறையில் சாகுபடி செய்து அதிக பயன் அடைய வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>கோனேரிபாளையத்தில் 550 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி</u>

பெரம்பலூர்: கோனேரிபாளையத்தில் 550 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டது. பெரம்பலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோனேரிபாளையத் தில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத்துறைமூலம் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்களைத் தடுக்க தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதன்படி நேற்று

(18ம்தேதி) காரியானூர், வேப்பந்தட்டை, விஜயகோபாலபுரம், நாரணமங்கலம், பூங்காநகர், கோவிந்தராசபட்டிணம், மழவராயநல்லூர், மருவத்தூர், கொளப்பாடி, பெரம்பலூர் சங்குபேட்டை பகுதி, கோனேரிப்பாளையம், தம்பிரான்பட்டி ஆகிய கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கோனேரிப்பாளையத்தில் நடந்த முகாமை ஊராட்சிமன்ற தலைவர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். கால்நடை மருத்துவர்கள் செந்தில்குமார், ராமன், செல்வம் ஆகியோர் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டனர். நேற்று நடைபெற்ற முகாம்களில் 4மாதம் வயதுள்ள கன்று முதல் சினை மற்றும் கறவை பசு உள்ளிட்ட அனைத்து மாடுகளுக்கும் என 550 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிப் போடப்பட்டது. இதில் ரோவர் வேளாண் கல்லூரி மாணவிகளும் கலந்துகொண்டு களப்பணியாற்றினர்.

**தென்னையை தாக்கும் ஈரியோபைட் சிலந்தியை கட்டுப்படுத்தும் முறை: விவசாயிகளுக்கு விளக்கம்**

சேதுபாவாசத்திரம்: தென்னையை தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஈரியோபைட் சிலந்தியை கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஈரியோபைட் சிலந்தி மிகச் சிறிய வெளிரிய பழுப்புநிற தோற்றம் உடையவை. முட்டை பருவம், 2 புழு பருவங்கள் மற்றும் வளர்ந்த சிலந்தி என நான்கு நிலை களை கொண்டுள்ளது. 7 முதல் 9 நாட்களை வாழ்க்கை சரிதமாக கொண்டவை. 4 கால்களை கொண்ட ஊசி போன்ற வாய் அமைப்பு உள்ளவை. பெண் சிலந்தி 30 முதல் 50 முட்டைகள் வரை இடும். இச்சிலந்தி இளங்குரும்பை களின் தொட்டிகளுக்கு அடியில் இருந்து கொண்டு குரும்பையின் மென்மை யான திசுக்களில் இருந்து சாற்றை உறிஞ்சி குடித்து உயிர் வாழ்கிறது. பாதிக்கப்பட்ட குரும்பைகள் வளர் ந்து இளம் காய்களாக மாறும்போது பழுப்புநிற பகுதியின் அளவு மேலும் அதிகமாகி நீளவாக்கில் சிறு சிறு வெடிப்புகள் தோன்றும். முற்றிய காய்களில் இப்பழுப்பு நிற திட்டுகள் கடினமாவதால் நீளவாக்கில் பெரிய வெடிப்புகள் ஏற்படும். மேலும் 4 மாத இளங்குரும்பைகள் உதிர்ந்து விழும் வாய்ப்புள்ளது. இதனால் காய்களின் அளவு சிறுத்து, பருப்பின் அளவும் 10 முதல் 30 சதவீதம் வரை குறைந்துவிடுகிறது. இத்துடன் தேங்காய்

உரிப் பதும் கடினமாகிறது. எண் ணிக்கை குறைவதில்லை. ஆனால் காய்களில் அளவு சிறுத்து விடுகிறது. இதனால் வியாபாரிகள் நிராகரித்து விடுகின்றனர். தேங்காய் உரிமட்டை கடினமாவதால் அதிலிருந்து கிடைக்கும் நாரின் அளவு, தரமும் பாதிக்கப்படுகிறது. இந்த சிலந்தியை கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு 1 ஆண்டுக்கு யூரியா 1,300 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட் டாஷ் 3,500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ, நன்கு மக்கிய தொழு உரம் 50 கிலோ மற்றும் நுண்ணூட்ட சத்துக்களான போராக்ஸ் 50 கிராம், ஜிப்சம் 1 கிலோ, மெக்னீசியம் சல்பேட் 1/2 கிலோ இட வேண்டும். மேலும் அசார்டிராக்டின் 1 சத தாவர பூச்சிக்கொல்லி மருந்தை சிறு கைதெளிப்பான் மூலம் 45 நாட்கள் இடைவெளியில் 1 முதல் 6 மாத குரும்பைகளின் மேல் படும்படி குறைந்தது 3 முறை தெளிக்க வேண்டும். முதல் முறை அசார்டிராக்டின் 1 சத மருந்து 5 மில்லியை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இரண்டாவது முறை 30 மில்லி வேப்பெண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அத்து டன் டீபால் ஒட்டுதிரவம் சிறிதளவு சேர்த்து தெளிக்க வேண்டும். மூன்றாவது முறை அசார்டிராக்டின் 1 சத மரு ந்து 5 மில்லியை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தை ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை உள்ள காலத்தில் தெளிப்பது நல்ல பலனை தரும். கைதெளிப்பான் கொண்டு தெளி க்க முடி யாத உயரமான மரங்களு க்கு அசார்டிராக்டின் 1 சத மருந்து 10 மில்லி மருந்தை 10 மில்லி தண்ணீரில் கலந்து வேரில் கட்டி இச்சிலந்தியின் சேதத்தை வெகுவாக கட்டுப்படுத்தலாம் இவ்வாறு சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**தினத் தந்தி**

**DAILY THANTHI**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சத்திரப்பட்டியில், வரத்து குறைவு எதிரொலி: தேங்காய் விலை உயர்வு</u>**



சத்திரப்பட்டி பகுதியில் வரத்து குறைவு எதிரொ லியாக தேங்காய்விலை உயர்ந்தது. இதனால் வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர். தேங்காய் உற்பத்தி திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தாலுகா சத்திரப்பட்டி, தாசரிபட்டி புதுக் கோட்டை, விருப்பாட்சி, வீரலப்பட்டி, சிந்தல வாடம் பட்டி மற்றும் வடகாடுமலைப் பகுதியில் வசிப்பவர்களில் பெரும் பாலானவர்கள் விவசாயிகளாகவே உள்ளனர். இவர்கள் விளை நிலங்களில் ஏராளமான தென்னை மரங்களை வைத்து தேங்காய் உற்பத்தி செய்கின்றனர். பின்னர் தேங்காய்களை தரம் பிரித்து ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு அவைகளை கொண்டு வந்து திண்டுக்கல், கோவை, திருச்சி, கேரளா மற்றும் மும்பை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். வரத்துகுறைவு இந்த நிலையில் கடந்த சில வருடங்களாக பழனி பகுதியில் பருவ மழை பொய்த்து போனது. இதனால் சத்திரப் பட்டி பகுதியில் உள்ள தென்னை மரங்கள் யாவும் போதிய நீர் கிடைக்காததால் கருகின. இதையடுத்து விவ சாயிகள் ஆழ்துளை கிணறு அமைத்து அதன் மூலம் கிடைத்த சிறிதளவு நீரை கொண்டு எஞ்சிய தென்னை மரங்கள் மூலம் தேங்காய் உற்பத்தி யில் ஈடுபட்டனர். ஆனாலும் விளைச்சல் போதிய அளவு கிடைக்க வில்லை. இதனால் ஒட்டன் சத்திரம் சந்தைக்கு தேங்காய் வரத்து வெகுவாக குறைந்தது.வியாபாரிகள்கவலை வரத்து குறைந்ததால் கடந்த மாதம் வரை ஒரு டன் தேங்காய் ரூ. 26 ஆயிரத்துக்கு விற்பனையான தேங்காய் தற்போது ரூ.2ஆயிரம் அதிகரித்து ரூ.28 ஆயிரத்திற்கு விற்பனையாகிறது. தேங்காய் உற்பத்தியில் தொடர்ந்து இதே நிலை நீடித்தால் இனி வரும் காலங்களில் தேங்காய்களின் விலை கடுமையாக உயரும் நிலை உள்ளது. இதனால் தங்கள் வியாபாரம் முழுமை யாக பாதிப்பு அடையும் நிலை ஏற்படும் என வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்.

**<u>தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த திறனாய்வு கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது</u>**



திறனாய்வுக் கூட்டத்தில் கலெக்டர் சரவணவேல்ராஜ் பேசியபோது எடுத்த படம்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் களின் செயல்பாடுகள் குறித்த திறனாய்வு கூட்டம் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நடந்தது.

திறனாய்வுகூட்டம்

அரியலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வழங்கப்பட்டுள்ள பல்வகை கடன் களின் முன்னேற்றம் குறித்தும் சம்பா நெல் சாகுபடி குறித்த முன்னேற்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் டாப் செட்கோ, டாம்கோ கடன் வழங்குதல், உரம் மற்றும் விதை நெல் இருப்பு தொடர் பாக திறனாய்வுக் கூட்டம் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. தேவைகளை பூர்த்தி செய்ய உத்தரவு கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்திலுள்ள 64 கூட் டுறவு கடன் சங்க செயலர் களிடம் தனித்தனியாக உரம் மற்றும் விதை நெல் இருப்புகள் மற்றும் பயிர் கடன் வழங்கியது தொடர்பாக கலெக்டர் கேட்டறிந்தார். பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யுமாறும் சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார். கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர்கா.சித்ரா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பா.குண சேகரன், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் கலந்து கொண்டனர். தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங் களின் செயல்பாடுகள் குறித்த திறனாய்வு கூட்டம் கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமையில் நடந்தது. திறனாய்வு கூட்டம் அரியலூர் மாவட்டத்தில்

உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வழங்கப் பட் டுள்ள பல்வகை கடன் களின் முன்னேற்றம் குறித்தும் சம்பா நெல் சாகுபடி குறித்த முன்னேற்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் டாப் செட்கோ, டாம்கோ கடன் வழங்குதல், உரம் மற்றும் விதை நெல் இருப்பு தொடர்பாக திறனாய்வுக் கூட்டம் கலெக்டர் சரவண வேல்ராஜ் தலைமையில்நடைபெற்றது. தேவைகளை பூர்த்தி செய்ய உத்தரவு கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்திலுள்ள 64 கூட் டுறவு கடன் சங்க செயலர் களிடம் தனித்தனியாக உரம் மற்றும் விதை நெல் இருப்புகள் மற்றும் பயிர் கடன் வழங்கியது தொடர்பாக கலெக்டர் கேட்டறிந்தார். பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யுமாறும் சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார். கூட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப்பதிவாளர்கா.சித்ரா, மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் நல அலுவலர் பா.குண சேகரன், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க செய லாளர்கள் கலந்து கொண் டனர்.

**தென்னை மரங்களுக்கு உரமாக மாறும் 'சங்காயம்' மீன்கள் பாம்பன் மீனவர்கள் வலையில் சிக்கின**



பொதுமக்கள் உணவாக பயன்படுத்தாமல் தென்னை மரங்களுக்கு உரமாக மாறுவது சங்காயம் எனப்படும் மீன்கள்தான். சங்காயம் மீன்கள் ராமேசுவரம், பாம்பன் பகுதியில் மீனவர்களின் வலையில் சிக்கும் பலவகையான மீன்கள் உணவுப்பொருளாக உள்நாட்டில் பயன்படுத்தப் படுவதுடன் ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் மீனவர்கள் பிடித்து வரும் சங்காயம் என்ற பெயருடைய சிறிய வகை மீன்கள் உணவாக பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக இவை கோழித் தீவனமாகவும்,தென்னை மரங்களுக்கு உரமாகவும் பயன்படுத்தப் படுவதுடன், இதற்காகவே ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. இந்த

நிலையில் பாம்பனில் இருந்து நேற்று முன்தினம் 50-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் 200-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றனர். இவர்கள் அனைவரும் நேற்று காலை மீன்களுடன் கரை திரும்பினர். அவர்களில் ஒரு சிலரின் படகுகளில் சுமார் 500 கிலோ முதல் 1 டன் வரை சங்காயம் மீன்கள் சிக்கியிருந்தன. இந்த மீன்கள் முழுவதும் கடற்கரையிலேயே உலர வைக்கப்பட்டன. இந்த பணியில் மீனவர்களும், மீனவ பெண்களும் தீவிரமாகஈடுபட்டிருந்தனர். தென்னை மரங்களின் உரம்

சங்காயம் மீன்கள் அதிக அளவில் கிடைத்தது குறித்து பாம்பனை சேர்ந்த மீன் வியாபாரி ஸ்டீபன் என்பவர் கூறியதாவது:-

விசைப்படகு மீனவர்கள் பிடித்து வரும் சங்காயம் மீன்களை மொத்த விலைக்கு வாங்குவோம். பின்னர் அவற்றை கடற்கரையிலேயே உலர வைத்து லாரி, வேன் மூலம் நாமக்கல், சேலம் போன்ற இடங்களுக்கு கோழித் தீவனத்திற்கு அனுப்பி வைப்போம். அத்துடன் தென்னை மரங்களுக்கு உரமாகவும் சங்காயம் மீன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இவை கேரள மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்படும்.

இந்த மீன்களை உப்புடன் சேர்த்து தென்னை மரத்தின் அடிப்பகுதியில் குழி தோண்டி புதைத்து வைத்தால் மரம் நன்றாக வளர்ச்சி அடைவதுடன், விளைச்சலும் அதிகமாக இருக்கும். இதனால் தமிழகத்தில் ஏராளமான ஊர்களுக்கு சங்காயம் மீன்கள் இங்கிருந்து அனுப்பி வைக்கப் படுகின்றன. இந்த மீன் உலர்த்தப்பட்ட நிலையில் 1 கிலோ ரூ.32 முதல் ரூ.35 வரை விலை போகும். இவ்வாறு அவர் கூறினார். ராமேசுவரம், பாம்பன் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான தென்னை மரங்களுக்கும் இந்த மீன்கள் உரமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தி இந்து

தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>வீராணம் ஏரியிலிருந்து 21-ம் தேதி முதல் தண்ணீர் திறக்கமுதல்வர் உத்தரவு</u>**



கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பாசன பகுதிகளுக்கு சாகுபடிக்காக கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து செப்டம்பர் 21-ம் தேதி முதல் தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "வேளாண் மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பாசன பகுதிகளுக்கு சாகுபடிக்காக கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து 21.9.2014 முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிடப் பட்டுள்ளது. இதனால், கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 1,31,903 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்" என தெரிவித்துள்ளார்.